# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## இரண்டாம் தவணைப்பரீட்சை - 2019

| தரம்:10 | கிறிஸ்தவம் | நேரம்:3.00 மணித்தியாலம் |
|---|---|---|

| சுட்டெண்:………………………………………………………………………… | 15 | T | I | |
|---|---|---|---|---|

**கவனிக்க:**

I.எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக

II. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

III. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தின் உள்ளே புள்ளடியை (X) இடுக.

### பகுதி 1

**மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. “நீதியோடும் நேர்மையோடும் ஆட்சி புரிந்து அதை நிலை பெயராது உறுதிப்படுத்துவார்” எனும் இறைவாக்கில் மெசியாவின் முக்கிய குணாதிசயங்களாக வெளிப்படுபவை
   1. அன்பும் நீதியும்
   2. மெசியாவின் வருகையும் ஆட்சியும்
   3. நீதியும் நேர்மையும்
   4. உறுதியும் நம்பிக்கையும

2. மத்தேயு நற்செய்தியில் இயேசுவின் பிறப்பு தொடர்பாகக் குறிப்பிடப்படும் வழிகாட்டி
   1. கபிரியேல் வானதூதர்
   2. இடையர்களின் வருகை
   3. மாட்டுத்தொழுவம்
   4. விசேட விண்மீன்

3. “மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிடமகனுக்கு அதிகாரம் உண்டு” என்பதை இயேசு வெளிப்படுத்தியது
   1. முடக்குவாதமுற்றவரை குணமாக்கியபோது
   2. இலாசரை உயிர்ப்பித்தபோது
   3. பார்த்திமேயுவுக்கு பார்வை அளித்தபோது
   4. கூன் விழுந்த பெண்ணை சுகமாக்கியபோது

4. யூத சமூகத்தில் ஒருவரின் நோய்க்கு காரணமாக கருதப்பட்ட விடயம்
   1. செல்வம் 2. அவரது பாவம் 3. தூய்மையின்மை 4. இறைபயமின்மை

5. “நீங்கள் வரிதண்டுபவர்களோடும் பாவிகளோடும் சேர்ந்து உண்பதும் குடிப்பதும் ஏன்?” என இயேசுவை வினவியவர்கள்
   1. சதுசேயர்
   2. பரிசேயரும் மறைநூல் அறிஞரும்
   3. தலைமைக் குருக்கள்
   4. பொதுமக்கள்

6. ஓய்வு நாளில் இயேசு செய்த புதுமை அல்லாதது
   1. நீர்க்கோவை நோயாளி குணமாதல்
   2. கை சூம்பியவர் குணமாதல்
   3. தொழுநோயாளி நலமாதல்
   4. கூன்விழுந்த பெண் நலமடைதல்

7. சமூகத்தால் ஒதுக்கப்பட்டு, நிராகரிக்கப்பட்ட நிலையில் இயேசுவால் இரக்கம் காட்டப்பட்டோர்

   A-சக்கேயு

   B-மார்த்தா

   C-தொழுநோயாளி

   D-சீமோன் என்னும் பரிசேயன்

   1. Aயும் Dயும் 2. Aயும் Bயும் 3. Cயும் Bயும் 4. Aயும் Cயும்

8. இயேசு யூத மதத் தலைவர்களுக்கு விடுத்த அறைகூவல்
   1. இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை
   2. இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று
   3. உன் கடவுளாகிய ஆண்டவரை சோதிக்க வேண்டாம்
   4. என் இல்லம், இறை வேண்டலின் வீடு. ஆனால் நீங்கள் இதை கள்வர் குகையாக்கினீர்கள்

9. "ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியினாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்குள் நுழைய இயலாது" என இயேசு கூறியது
   1. பேதுருவுக்கு 2. தோமாவுக்கு 3. நிக்கதேமுவுக்கு 4. நூற்றுவத் தலைவனுக்கு

10. "ஓசான்னா" என்பதன் பொருள்
    1. அமைதி 2. நம்பிக்கை 3. மகிமை 4. வெற்றி

11. இயேசுவின் உருமாற்றத்துடன் தொடர்புடைய கூற்று
    1. "உங்களுக்கு அமைதி உரித்தாகுக"
    2. "படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள்"
    3. "என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்"
    4. "இவரே என் மைந்தர், நான் தேர்ந்து கொண்டவர் இவரே, இவருக்கு செவிசாயுங்கள்"

12. "துயரம் நிறைந்த இடத்தில் பேரானந்தத்தையும், இருள் சூழும் இடத்தில் ஒளியையும் எடுத்துச் செல்ல எனக்கு துணை புரியும்" என வேண்டியவர்
    1. திருத்தந்தை முதலாம் பிரான்சிஸ் 2. அசீசி ஊர் பிரான்சிஸ்
    3. பவுல் அடிகளார் 4. யோசவ்வாஸ் அடிகளார்

13. உரோமப் பேரரசின் கீழ் யூதர்கள் அனுபவித்த துன்பம் அல்லாதது
    1. மத சுதந்திரமின்மை 2. அந்நியர் ஆட்சி
    3. வரிச்சுமை 4. பொருளாதார ரீதியான துன்பம்

14. தலைமைக் குருக்களும் மூப்பர்களும் எப்பிரிவினரிடம் இருந்து தெரிவு செய்யப்பட்டனர்
    1. பரிசேயரிடமிருந்து 2. சதுசேயரிடமிருந்து
    3. சட்ட வல்லுனர்களிடமிருந்து 4. அரச பரம்பரையிலிருந்து

Education கல்வி அධ්‍යාපන

15. ‘‘எந்த அதிகாரத்தால் இவற்றைச் செய்கிறீர்?’’ என சதுசேயர் இயேசுவை வினவிய சந்தர்ப்பம்.
    1. முடக்குவாதமுற்றவனைக் குணமாக்கியபோது
    2. தண்ணீரை இரசமாக்கியபோது
    3. கோவிலைத் தூய்மையாக்கியபோது
    4. யாயீரின் மகளை உயிர்ப்பித்தபோது

கீழே தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 16-20 வரையான வினாக்களுக்கு விடை தருக.

A- ‘‘பிதாவே உமது கரங்களில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்’’

B- ‘‘என் விருப்பப்படி அல்ல உம் விருப்பப்படியே நிகழட்டும்’’

C- பிலாத்து

D- பேதுரு

E- யோவான்

16. ‘‘நீர் யூதரின் அரசனா?’’ என இயேசுவை வினவியவர்
    1. C 2. D 3. E 4. A
17. இயேசு சிலுவையில் கூறிய இறுதி வார்த்தை
    1. A 2. B 3. C 4. D
18. ‘‘நீர் கடவுளின் மெசியா’’ என அறிக்கையிட்டவர்
    1. C 2. D 3. E 4. B
19. ஒலிவ மலையில் இயேசுவின் வேண்டுதலாக அமைவது
    1. A 2. B 3. C 4. D
20. முதன்மை சீடர்களுள் அடங்குவோர்
    1. Dயும் E யும் 2. D யும் C யும்
    3. Cயும் E யும் 4. Cயும் Dயும் E யும்

21. இயேசு சோதனைகளை வெற்றி கொண்டது
    1. தம் மனக்கட்டுப்பாட்டினால் 2. இறை வல்லமையினால்
    3. தூய ஆவியினால் 4. இறை வார்த்தையினால்
22. யூத சமூகத்தில் ‘‘திருமுழுக்கு’’ என்பது குறித்து நிற்பது
    1. மனமாற்றத்தின் அடையாளம் 2. உடன்படிக்கையின் அடையாளம்
    3. தூய்மைப்படுத்தலின் அடையாளம் 4. பாவம் கழுவப்படுதலின் அடையாளம்

23. இயேசுவின் உயிர்ப்பு என்பது
    1. உலக கிறிஸ்தவர்களால் கொண்டாடப்படும் பெருவிழா
    2. மனுக்குலத்தின் நிலைவாழ்விற்கான வாசலைத் திறக்கும் புதிய எதிர்பார்ப்பு
    3. இயேசுவின் பாடுகள், மரணம் நினைவுகூரப்படல்
    4. யூதக் கிறிஸ்தவர்களின் வெற்றி

Education கல்வி අධ්‍යාපන

24. சக்கேயுவின் மனமாற்ற அறிக்கையில் உள்ளடங்காதது

A- என் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்து விடுகிறேன்.

B- ஆண்டவரே, நான் பாவி, நீர் என்னை விட்டுப் போய்விடும்.

C- எவரையாவது ஏமாற்றி இருந்தால், அதை நான்கு மடங்காக திருப்பிக் கொடுத்து விடுகிறேன்.

1. Aயும் C யும்
2. B யும் C யும்
3. B
4. A

25. எமது வாழ்விற்கு ஆன்மீக உணவு தேவை என்பதை வெளிப்படுத்திய புதுமை
1. தண்ணீரை இரசமாக்கியமை
2. 5000 பேருக்கு உணவளித்தமை
3. இலாசரை உயிர்ப்பித்தமை
4. முடக்குவாதக்காரனை குணமாக்கியமை

26. ''இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி'' என இயேசுவை வர்ணித்தவர்.
1. பேதுரு
2. திருமுழுக்கு யோவான்
3. ஏரோது
4. லேவி

27. சாரிபாத் கைம்பெண்ணிடம் அனுப்பப்பட்ட இறைவாக்கினர்
1. எலியா
2. எலிசா
3. எரேமியா
4. எசாயா

28. ''நசரேத்து அறிக்கை'' எனப்பட்ட இறைவாக்கு, எடுக்கப்பட்ட வேதப்பகுதி
1. மலாக்கி
2. எசாயா
3. மீக்கா
4. செக்கரியா

29. இயேசு, சிலுவையில் அறையப்பட்ட இடம்

A-கபாலஸ்தலம்

B-மண்டை ஒட்டு இடம்

C-போர் மலை

1. Aயும் C யும்
2. A யும் B யும்
3. Bயும் C யும்
4. A யும் B யும் C யும்

30. ''உலகின் பாவங்களைப் போக்குபவர்'' என்ற கூற்றுக்கு பொருத்தமானவர்
1. இயேசு
2. திருமுழுக்கு யோவான்
3. மோசே
4. ஆபிரகாம்

31. இயேசுவின் பணியின் குறிக்கோள்கள் வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பம்
1. சமவெளிப் பொழிவின்போது
2. சீடர்களின் அழைப்பின்போது
3. இயேசுவின் தோற்ற மாறுதலின்போது
4. நசரேத்து தொழுகைக்கூட பிரசங்கத்தின்போது

32. திருமுழுக்கு யோவானைப் பின்பற்றும் நீர்,
1. இறைபக்தியுடன் வாழ வேண்டும்
2. தனிமையான வாழ்வை மேற்கொள்ள வேண்டும்
3. துறவியின் வாழ்வை ஏற்க வேண்டும்
4. சமுதாய கட்டுப்பாடுகளுக்கு அப்பால் செயற்படத் தயாராயிருத்தல் வேண்டும்.

33. கிறிஸ்தவர்களின் எதிர்பார்ப்பு என்பது
1. அறிவியலை வளர்ப்பது
2. பணம் சம்பாதிப்பது
3. இறையரசை உரிமையாக்கிக் கொள்வது
4. இவ்வுலக நற்கிரியைகளைச் செய்வது

34. காணாமல்போன மகனின் உவமை மூலம் வெளிப்படும் முக்கிய படிப்பினை
1. சுயநலமற்ற வாழ்வு
2. கீழ்ப்படிவான வாழ்வு
3. கடவுளின் எல்லையற்ற அன்பை உணர்ந்து கொள்வது
4. செல்வத்தை சிக்கனமாகப் பயன்படுத்துவது

35. இயேசு பிறப்பின் சிறப்பை உணர்ந்த ஓர் கிறிஸ்தவன், அழுத்தம் கொடுக்க வேண்டியது
A-அது தரும் அமைதியின் செய்திக்காகும்
B- அதன் வரலாற்று முக்கியத்துவத்திற்காகும்
C-அதனை ஒட்டிய தீர்க்க தரிசனங்களுக்காகும்
D- ஏழைகளுக்கு அது தரும் நற்செய்திக்காகும்
இவற்றுள் மிகச் சரியான விடை
1. AD 2. BC 3.AC 4.BD

பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 36-38 வரையான வினாக்களுக்கு விடை தருக

A-சிமியோன்
B-கிளேயோப்பா
C-மரியா
D-அரிமத்தியா ஊர் யோசேப்பு

36. இயேசுவின் உடலை அடக்கம் செய்ய, பிலாத்துவிடம் சென்று அனுமதி கேட்டவர்
1. A 2. B 3.C 4.D
37. "நல்ல பங்கை தேர்ந்து கொண்டவர்" என இயேசுவால் குறிப்பிடப்பட்டவர்
1. A 2. B 3.C 4.D
38. எம்மாவு பயணத்தில் இடம்பெற்ற சீடர்
1. A 2. B 3.C 4.D

39. இரு நற்செய்திப் பயணங்களின்போதும் இயேசுவால் சீடர்களுக்கு வழங்கப்பட்ட பொதுவான அறிவுரை
1. இருவர் இருவராகச் செல்லுதல்
2. நற்செய்தியை ஏற்றுக் கொள்ளாதோருக்கு எதிராக காலடி தூசியை உதறிவிடல்
3. கைத்தடி, ஒன்றுக்கு மேற்பட்ட அங்கி என்பவற்றை எடுத்துச் செல்லாதிருத்தல்
4. இயேசு போகவிருந்த எல்லா ஊர்களுக்கும் செல்லுதல்

40. திருச்சட்டத்தின் மையமாக அமைவது
1. அன்பு 2. மன்னிப்பு 3. பகிர்வு 4. தியாகம்

(40x1=40 புள்ளிகள்)

# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## இரண்டாம் தவணைப்பரீட்சை - 2019

| தரம்:10 | கிறிஸ்தவம் | நேரம்: 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

| சுட்டெண்:........................................................................................ | 15 | T | II | |
|---|---|---|---|---|

**கவனிக்க:**

I. முதலாம் வினா கட்டாயமானது, ஏனைய வினாக்களிலிருந்து நான்கு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

II. முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் இரண்டாம் வினா உட்பட ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்டும்.

### பகுதி – II

**சுருக்கமான விடைதருக.**

**01.**

1. இறை திட்டத்திற்கு கீழ்ப்படிந்தோர் இருவரைத் தருக.
2. இயேசு மற்றும் திருமுழுக்கு யோவான் ஆகியோரின் பிறப்பில் காணப்பட்ட ஒற்றுமைகள் 2 தருக.
3. குழந்தை இயேசுவை இனங்காண்பதற்கு வானதூதரால் இடையர்களுக்கு வழங்கப்பட்ட அடையாளம் யாது?
4. திருமுழுக்கு யோவானால் பொது மக்களுக்கு வழங்கப்பட்ட அறிவுரை யாது?
5. நசரேத்து அறிக்கைக்கு எதிராக செயற்பட்டவர்களுக்கு இயேசுவால் சுட்டிக்காட்டப்பட்ட இரு முதுமொழிகளையும் குறிப்பிடுக.
6. மீன்பிடித்தொழிலில் ஈடுபட்ட இயேசுவின் சீடர்கள் இருவரைத் தருக.
7. “உமது நம்பிக்கை உம்மை மீட்டது. அமைதியுடன் செல்க” இக்கூற்று யாரால், யாருக்கு கூறப்பட்டது?
8. பரிசேயர், சதுசேயருக்கு இடையே காணப்பட்ட கொள்கை ரீதியான பிரதான வேறுபாடுகள் 2 தருக.
9. திராட்சைத் தோட்டக் குத்தகைக்காரர் உவமையில் பின்வருவோர் யாருக்கு ஒப்பிடப்படுகின்றனர்?
   திராட்சைத் தோட்டப் பணியாளர்கள் -
   திராட்சைத் தோட்ட உரிமையாளரின் மகன் -
10. பாடுகளின் பாதையில் இயேசுவை எதிர்கொண்டவா்கள் இருவரைக் குறிப்பிடுக.

(10x2=20 புள்ளிகள்)

**02.**

1. உயிர்த்த இயேசு காட்சியளித்த சந்தர்ப்பங்கள் 2 தருக?
2. “உயிரோடு இருப்பவரை கல்லறையில் தேடுவது என்ன?” இக் கூற்று யாரால், யாருக்கு கூறப்பட்டது?
3. இயேசுவின் உயிர்ப்பின் செய்திக்கு சான்று பகர உம்மால் ஆற்றக் கூடிய செயற்பாடுகள் 4 தருக?

(2+3+5=10புள்ளிகள்)

**03.**

1. “இயேசு இறைமகனா” என்ற சவாலை விடுக்கும் வகையில் முன்வைக்கப்பட்ட சோதனையைத் தருக?
2. இச்சோதனைக்கு இயேசு அளித்த பதிலையும் அதன் மூலம் வெளிப்படும் படிப்பினையையும் தருக?
3. நீர், உமது வாழ்வில் எதிர்கொண்ட சோதனை ஒன்றைக் குறிப்பிட்டு அதிலிருந்து மீண்டெழுந்த விதத்தை விபரிக்குக?

(2+3+5=10புள்ளிகள்)

**04.**

1. இயேசுவின் வாழ்வில் யூத சம்பிரதாயங்கள் கடைப்பிடிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் 2 தருக?
2. “நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்கு தெரியாதா?” எனும் இயேசுவின் வினாவிலிருந்து வெளிப்படும் கருத்துக்கள் 2 தருக?
3. இலங்கையர் என்ற ரீதியில் எம்மால் கடைப்பிடிக்கப்படுகின்ற சம்பிரதாயங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றைக் கிறிஸ்தவ போதனைக்கு முரணற்ற வகையில் அனுசரிக்கும் முறை பற்றி விபரிக்குக.

(2+3+5=10புள்ளிகள்)

**05.**

1. யூத நீதிமன்றம் எப்பெயரால் அழைக்கப்பட்டது?
2. பிலாத்து முன்னிலையில் இயேசுவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் எவை?
3. இயேசு உயிர் நீத்த போது ஏற்பட்ட அசாதாரண நிகழ்வுகள் எவை? அவை வெளிப்படுத்தும் மறை உண்மைகளைக் குறிப்பிடுக.

(2+3+5=10 புள்ளிகள்)

**06.**

1. இயேசு தனது முதலாவது போதனையை எங்கு செய்தார்?
2. இயேசுவின் அப்போதனை எவ்வாறு அழைக்கப்படும்?
3. இயேசு வாசித்த வேதவாக்கியத்தில் கூறப்பட்ட விடயங்கள் சில தருக?

(2+3+5=10 புள்ளிகள்)

**07.**

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** சிறுகுறிப்பு எழுதுக.

1. இறுதி திருவிருந்து
2. தலைமகன் அர்ப்பணமும் மீட்பும்
3. சீமோன் பேதுரு
4. கெத்சமனி வேண்டுதல்

(10 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

## இரண்டாம் தவணைப் பரீட்சை 2019

## கிறிஸ்தவம் தரம் - 10

## (புள்ளித்திட்டம்)

### பகுதி 1

| | | | |
|---|---|---|---|
| 1. 3 | 11. 4 | 21. 4 | 31. 4 |
| 2. 4 | 12. 2 | 22. 3 | 32. 4 |
| 3. 1 | 13. 1 | 23. 2 | 33. 3 |
| 4. 2 | 14. 2 | 24. 3 | 34. 3 |
| 5. 2 | 15. 3 | 25. 2 | 35. 1 |
| 6. 3 | 16. 1 | 26. 2 | 36. 4 |
| 7. 4 | 17. 1 | 27. 1 | 37. 3 |
| 8. 4 | 18. 2 | 28. 2 | 38. 2 |
| 9. 3 | 19. 2 | 29. 2 | 39. 2 |
| 10. 3 | 20. 1 | 30. 1 | 40. 1 |

(40x1=40 புள்ளிகள்)

### பகுதி 2

**01.**

1. செக்கரியா, எலிசபேத், யோசேப்பு, மரியா
2. 1. கபிரியேல் வானதூதரால் முன்னறிவிக்கப்பட்டமை
   2. இரு பிறப்பும் உலகிற்கு மகிழ்ச்சி தரும் செய்தி
3. துணிகளால் சுற்றி தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள்
4. இரண்டு அங்கிகளை உடையவர், இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும் உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும்
5. 1. ''மருத்துவரே உம்மையே நீர் குணமாக்கிக் கொள்ளும்
   2. ''இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை''
6. பேதுரு, அந்திரேயா, யோவான், யாக்கோபு
7. இயேசுவால், பாவிப்பெண்ணுக்கு
8. 1. பரிசேயர் வாய்மொழிப் பாரம்பரிய நீதிச்சட்டங்களையும் ஏற்றுக் கொண்டனர். ஆனால் சதுசேயர், மறைநூல் அறிஞரால் எழுதப்பட்ட நீதிச்சட்டத்தை மட்டுமே பின்பற்றினர்.
   2. வானதூதர், உயிர்த்தெழுதல் என்பவற்றைப் பரிசேயர் நம்பினர். சதுசேயர் இக்கருத்துக்களை ஏற்கவில்லை.
   3. திருமுழுக்கு யோவானின் போதனைகளைக் கேட்பதற்கு சதுசேயர் ஆயத்தமாக இருக்கவில்லை.
9. உலகமக்கள், இயேசு
10. சீரேன் ஊர் சீமோன், எருசலேம் மகளிர்…

(10x2=20 புள்ளிகள்)

**02.**

1. எம்மாவூர் சீடர்களுக்கு தோன்றுதல்
   தோமா தவிர்ந்த ஏனைய சீடர்களுக்கு தோன்றுதல்
   தோமா உட்பட சீடர்களுக்கு தோன்றுதல்

2. வானதூதரால் - பெண்களுக்கு
வாரத்தின் முதல் நாள் விடியற்காலையில், நறுமணத் தைலம் பூசுவதற்காக இயேசுவின் கல்லறைக்குச் சென்ற பெண்கள் இயேசுவின் உடலைக் காணாது திகைப்படைந்தபோது
3. பொருத்தமான விடை எழுதியிருப்பின் புள்ளி வழங்குக.

(2+3+5=10புள்ளிகள்)

**03.**

1. “நீர் இறைமகன் என்றால் இந்தக்கல் அப்பமாகும்படி இவற்றுக்கு கட்டளையிடும்”
2. “மனிதன் அப்பத்தினால் மட்டுமன்றி கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றிலும் உயிர் வாழ்கிறான்”
படிப்பினை - மனித வாழ்விற்கு சரீரத்தின் தேவைகள் மட்டுமல்ல ஆன்மீக போசனையும் அத்தியாவசியம் என வெளிப்படுத்துகிறார்.
3. மாணவர்களின் விடைகளுக்கு ஏற்ப புள்ளிகள் வழங்கவும்

(2+3+5=10புள்ளிகள்)

**04.**

1. விருத்தசேதனம் செய்யப்படலும் பெயரிடலும்
தலைமகன் அர்ப்பணிப்பு மேற்கொள்ளப்படல்
பன்னிரண்டு வயதில் பாஸ்கா விழாவிற்கு அழைத்துச் செல்லப்படல்
2. கடவுளை இயேசு தனது பிதாவாக ஏற்றுக் கொண்டிருந்தார்.
இயேசு தன்னைப் பற்றி அறிந்திருந்தார்
கோவிலில் கடவுளை வழிபடுவதற்கு கோவிலில் தரித்திருக்க வேண்டும்.
3. பொங்கல் கொண்டாடுதல் - படைப்பை வழிபடாமல் படைத்த இறைவனைப் போற்றுதல்
அத்திவாரம் இடல் - மூடநம்பிக்கைகளில் மூழ்காது கடவுளின் ஆசீரைப் பெற்று மேற்கொள்ளல் , வழிபாடுகளை மேற்கொள்ளல், மாணவர்களின் விடைகளுக்கு ஏற்ப புள்ளிகள் வழங்கவும்

(2+3+5=10புள்ளிகள்)

**05.**

1. சனதரிம்.
2. மக்களைத் தூண்டுபவர்
பேரரசுக்கு வரி செலுத்துவதைத் தடுத்தல், தன்னைக் கிறிஸ்து என்னும் அரசர் என கூறுதல்
3. சூரியன் இருளடைதல் - எல்லாவற்றையும் படைத்த இறைவன் அனைத்து உயிர்களுக்காகவும் உயிர் நீத்தார்
திரைச்சீலை இரண்டாகக் கிழிதல் - அனைவருக்கும் இறைசமூகத்திற்கு செல்லும் வரம் கிடைத்தமை அடையாளப்படுத்தப்பட்டது.

(2+3+5=10புள்ளிகள்)

**06.**

1. கலிலேயாவிலுள்ள நாசரேத்து தொழுகைக் கூடத்தில்
2. நாசரேத்து அறிக்கை
3. ஏழைகளுக்கு நற்செய்தி அறிவித்தல்
சிறைப்பட்டோருக்கு விடுதலை கிடைத்தல்
பார்வையற்றோர் பார்வை கிடைப்பதை அறிவித்தல்
ஒடுக்கப்பட்டோருக்கு விடுதலை கிடைப்பதை அறிவித்தல்
ஆண்டவரின் அருள் தரும் ஆண்டதனை அறிவித்தல்

**07.** மாணவர்களின் விடைகளுக்கு ஏற்ப புள்ளிகள் வழங்கவும்

(10 புள்ளிகள்)

Follow and Get papers Daily ..!

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page